பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

26 03 2024 6 45

செவ்வாய்க்கிழமை காலை

தலைப்புச் செய்திகள்

1. தமிழகத்தில் மக்களவைத் தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் நாளை நிறைவடைய உள்ள நிலையில் வேட்புமனு தாக்கல் தீவிரமடைந்துள்ளது.

2. தமிழகத்தில் ஏற்பட்ட இயற்கை பேரிடருக்கான நிவாரணத் தொகையை மத்திய அரசு அளிக்கவில்லை என்று திமுக தலைவரும், முதலமைச்சருமான திரு. மு.க. ஸ்டாலின் குற்றம் சாட்டியுள்ளார்.

3. கடந்த 10 ஆண்டுகளில் மத்திய அரசு பல்வேறு வளர்ச்சிப் பணிகளை மேற்கொண்டுள்ளதாக பிஜேபி வேட்பாளரும், மத்திய அமைச்சருமான திரு. எல். முருகன் தெரிவித்துள்ளார்.

4. தமிழகத்தில் 10ஆம் வகுப்பு பொதுத்தேர்வு இன்று தொடங்குகிறது.

5. ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் சென்னை அணி இன்று குஜராத் அணியை எதிர்கொள்கிறது.

*------ இனி விரிவான செய்திகள் ---*

<<<<>>>>

தமிழகத்தில் மக்களவைத் தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் நாளை நிறைவடைகிறது. இந்நிலையில் பல்வேறு கட்சிகளின் வேட்பாளர்களும், சுயேச்சைகளும் தொடர்ந்து மனு தாக்கல் செய்து வருகின்றனர்.

நாளை மறுநாள் மனுக்கள் மீதான பரிசீலனை நடைபெற உள்ளது. மனுக்களை விலக்கிக்கொள்ள 30ஆம் தேதி கடைசி நாளாகும்.

விளவங்கோடு சட்டப்பேரவைத் தொகுதி இடைத்தேர்தலில் வேட்புமனு தாக்கல் செய்வதற்கும் நாளை மறுநாள் கடைசி நாளாகும்.

இதையடுத்து அரசியல் கட்சியினரின் பிரச்சாரம் தீவிரமடைந்துள்ளது.

தமிழகத்தில் ஏற்பட்ட இயற்கை பேரிடருக்கான நிவாரணத் தொகையை மத்திய அரசு அளிக்கவில்லை என்று திமுக தலைவரும், முதலமைச்சருமான திரு. மு.க. ஸ்டாலின் குற்றம் சாட்டியுள்ளார்.

திருநெல்வேலி மாவட்டம் நாங்குனேரியில் நடைபெற்ற தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் அவர் இவ்வாறு கூறினார்.

கடந்த காலங்களில் மத்திய அரசில் திமுக அங்கம் வகித்தபோது தமிழகத்திற்காக 69 சிறப்புத் திட்டங்கள் கொண்டுவரப்பட்டதாகவும், 11 சதவீதம் சிறப்பு நிதி பெற்றப்பட்டதாகவும் திரு. மு.க. ஸ்டாலின் குறிப்பிட்டார்.

நீலகிரி மாவட்டத்தின் சுற்றுலாத்துறைக்கு கடந்த 10 ஆண்டுகளாக மத்திய அரசு அதிக முக்கியத்தும் அளித்து வருவதாக பிஜேபி வேட்பாளரும், மத்திய அமைச்சருமான திரு. எல் முருகன் கூறியுள்ளார்.

இதுகுறித்து நீலகிரியில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், இம்மாவட்டத்தில் உள்ளவர்கள் பெரு நகரங்களுக்குச் செல்வதை தவிர்க்கும் வகையில் நீலகிரி மாவட்டத்தை தொழில் வளர்ச்சி மிகுந்த பகுதியாக திகழச் செய்வதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அவர் தெரிவித்தார்.

கடந்த 10 ஆண்டுகளில் மத்திய அரசு பல்வேறு வளர்ச்சிப் பணிகளை மேற்கொண்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

ஜனநாயகத்தைக் காப்பதில் தாங்கள் அக்கறை செலுத்தி வருவதாக திரு. எல். முருகன் கூறினார்.

அதிமுக கூட்டணி, மக்களவைத் தேர்தலில் புதுச்சேரி உள்ளிட்ட 40 தொகுதிகளிலும் வெற்றி பெறும் என்று தேமுதிக துணைப் பொதுச்செயலாளர் திரு. எல்.கே. சுதீஷ் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

திருவள்ளூரில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர் இவ்வாறு கூறினார்.

நாட்டில் போதைப்பொருட்கள் இல்லாத நிலையை உருவாக்கும் வகையில் பிஜேபி கூட்டணி பாடுபடும் என்று பாமக நிறுவனர் மருத்துவர் ச. ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

விழுப்புரம் மக்களவைத் தொகுதியில் நடைபெற்ற வேட்பாளர் அறிமுகக் கூட்டத்தில் அவர் கலந்துகொண்டு பேசினார்.

மாநில மொழிகள் ஆட்சி மொழியாவதற்கும், விவசாயிகளின் விலைபொருட்களுக்கு நல்ல விலை கிடைப்பதற்கும் இக்கூட்டணி செயல்படும் என்றும் கூறினார்.

மக்களை முன்னிலைப்படுத்துவதுதான் காங்கிரஸ் கூட்டணியின் நோக்கம் என்று அக்கட்சியின் திருவள்ளூர் தொகுதி வேட்பாளர் திரு. சசிகாந்த் செந்தில் தெரிவித்துள்ளார்.

திருவள்ளூர் மாவட்டத்தில் நடைபெற்ற கூட்டணிக் கட்சி வேட்பாளர்கள் அறிமுகக் கூட்டத்தில் பேசியபோது அவர் இதனைத் தெரிவித்தார்.

தேனி மக்களவை தொகுதி அமமுக வேட்பாளரும், அக்கட்சியின் பொதுச்செயலாளருமான திரு. டிடி.வி தினகரன் நேற்று வாக்கு சேகரித்தார்.

பெரியகுளம் சட்டப்பேரவைத் தொகுதிக்குபட்ட பல்வேறு பகுதிகளில் அவர் பிரச்சாரம் மேற்கொண்டார்.

இதற்கிடையே 100 சதவீத வாக்குப்பதிவை வலியுறுத்தி தொடர்ந்து பல்வேறு இடங்களில் விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்று வருகின்றன.

காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் அதிநவீன வீடியோ வாகனம் மூலம் ஒளிபரப்படும் தேர்தல் விழிப்புணர்வு குறும்படத்தினை மாவட்ட தேர்தல் அலுவலரும், ஆட்சியருமான திருமதி

கலைச்செல்வி மோகன் அறிமுகம் செய்து வைத்தார்.

இந்நிலையில் முதல் முறையாக வாக்களிப்பதை ஆர்வத்துடன் எதிர்நோக்குவதாக பெரம்பலூரைச் சேர்ந்த வாக்காளர்கள் எமது செய்தியாளரிடம் தெரிவித்தனர்.

<<<<>>>>

தமிழகத்தில் 10ஆம் வகுப்பு பொதுத்தேர்வு இன்று தொடங்குகிறது.

இத்தேர்வை 9 லட்சத்து 38 ஆயிரம் மாணவ – மாணவிகள் எழுத உள்ளனர்.

தனித் தேர்வர்கள் 28 ஆயிரத்து 877 பேர் எழுத உள்ளனர்.

முதல் நாளான இன்று தமிழ் உள்ளிட்ட மொழிப்பாடத் தேர்வு நடைபெற உள்ளது.

அடுத்த மாதம் 8ஆம் தேதி வரை தேர்வு நடைபெற உள்ளது.

இதற்காக மாநிலம் முழுவதும் 4 ஆயிரத்து 107 தேர்வு மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

தேர்வு அறை கண்காணிப்பாளர் பணியில் 48 ஆயிரத்து 700 ஆசிரியர்களும், முறைகேடுகளைத் தடுக்க 4 ஆயிரத்து 591 நிலையான மற்றும் பறக்கும் படைகளும் அமைக்கப்பட்டுள்ளன.

தேர்வு அறைக்குள் செல்போன் போன்ற மின் சாதனங்கள் கொண்டுவர தடை விதிக்கப்பட்டுள்ளது.

தேர்வில் ஒழுங்கீன செயல்களில் ஈடுபட்டால் நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் ஒழுங்கீன செயலை ஊக்கப்படுத்த முயன்றால் பள்ளிக்கான அங்கீகாரம் ரத்து செய்யப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அடுத்த மாதம் 12ஆம் தேதி முதல் 22ஆம் தேதி வரை விடைத்தாள் திருத்தும் பணி நடைபெறும் என்றும், தேர்வு முடிவு மே மாதம் 10ஆம் தேதி வெளியிடப்படும் என்றும் தேர்வுத்துறை வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<>>>>

*<u>இருவரிச் செய்திகள்</u>*

காஸா பகுதியில் உடனடியாக சண்டை நிறுத்தத்தை வலியுறுத்த ஐ.நா. பாதுகாப்பு குழுவில் கொண்டு2வரப்பபட்ட வரைவு தீர்மானத்திற்கு 14 நாடுகள் ஆதரவு தெரிவித்தன.

-------------

தெற்கு சீன கடல் பகுதியில் பிலிப்பைன்ஸ் நாட்டைச் சேர்ந்தவர்களின் படகு மீது தாக்குதல் நடத்தியதற்காக சீன தூதரிடம் பிலிப்பைன்ஸ் தனது அதிருப்தியை தெரிவித்துள்ளது.

-------------

ஆஃப்கனிஸ்தானைச் சேர்ந்த சுமார் 10 லட்சம் அகதிகளை மீண்டும் அந்நாட்டுக்கு அனுப்புவதற்கான நடவடிக்கைகளை பாகிஸ்தான் தொடங்கியுள்ளது.

-------------

ஜம்மு-கஷ்மீர் உயர்நீதிமன்றத்தின் கூடுதல் நீதிபதியாக முகமது யூசுஃப் வானி நேற்று பொறுப்பேற்றுக்கொண்டார்.

-------------

தில்லியின் கிழக்குப் பகுதியில் ஹோலி கொண்டாட்டத்தின்போது மின்சாரம் தாக்கியதில் 6 பேர் காயமடைந்தனர்.

-------------

மத்தியப்பிரதேச மாநிலம் உஜ்ஜைனில் உள்ள மகா காளேஸ்வரர் கோவிலில் ஏற்பட்ட தீ விபத்தில் காயமடைந்தவர்களுக்கு தலா ஒரு லட்சம் ரூபாய் நிவாரண உதவியும், இலவச சிகிச்சையும் வழங்கப்படும் என்று அம்மாநில அரசு அறிவித்துள்ளது.

-------------

சேலம் மாவட்டத்தில் மின்னணு வாக்குப்பதிவு எந்திரங்களை 11 சட்டப்பேரவைத் தொகுதிகளுக்கு அனுப்பும் பணிகள் நேற்று நடைபெற்றன.

-------------

ராணிப்பேட்டை மாவட்டம் வாலாஜாவில் நில உட்பிரிவை மாற்றம் செய்வதற்காக லஞ்சம் வாங்கிய நில அளவையரை லஞ்ச ஒழிப்பு போலிசார் கைது செய்தனர்.

-------------

திருவாரூர் தியாகராஜர் கோவிலில் பக்த காட்சி அபிஷேகம் இன்று காலை 8 மணிக்கு நடைபெற உள்ளது.

-------------

மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி அருகே சட்டவிரோதமாக மது விற்பனை செய்த பெண் ஒருவரை காவல்துறையினர் கைது செய்தனர்.

-------------

*விளையாட்டுச் செய்திகள்*

ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் சென்னை அணி இன்று குஜராத் அணியை எதிர்கொள்கிறது.

சென்னையில் நடைபெற இப்போட்டி இரவு மணி 7.30க்கு தொடங்குகிறது.

நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் பெங்களூரு அணி 4 விக்கெட் வித்தியாசத்தில் பஞ்சாப் அணியை வென்றது.

பெங்களூருவில் நடைபெற்ற இப்போட்டியில் முதலில் பேட் செய்த பஞ்சாப் அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 6 விக்கெட் இழப்புக்கு 176 ரன் எடுத்தது.

அதிகபட்சமாக ஷிகர் தவான் 45 ரன் எடுத்தார்.

பஞ்சாப் அணியின் பந்துவீச்சாளர்கள் முகமது சிராஜ், மேகஸ்வெல் ஆகியோர் தலா 2 விக்கெட் வீழ்த்தினார்கள்.

177 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் களமிறங்கிய பெங்களூரு அணி, 19 புள்ளி 2 ஓவரில் 6 விக்கெட் இழப்புக்கு 178 ரன் எடுத்து வெற்றி பெற்றது.

அதிகபட்சமாக விராட்கோலி 77 ரன் எடுத்தார். தினேஷ் கார்த்திக் 10 பந்துகளில் 28 ரன் எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தார்.

---------------

இந்தியா – மலேசியா இடையே 23 வயதுக்குட்பட்டோருக்கான இரண்டாவது நட்புணர்வு கால்பந்துப் போட்டி டிராவில் முடிவடைந்தது.

கோலாலம்பூரில் நடைபெற்ற இப்போட்டியில் இரு அணிகளும் தலா ஒரு கோல் போட்டன.

------------

உலகக்கோப்பை கால்பந்து தகுதிச்சுற்று ஆட்டத்தில் இந்தியா இன்று ஆஃப்கனிஸ்தானை எதிர்கொள்கிறது.

குவஹாத்தியில் நடைபெற உள்ள இப்போட்டி இரவு 7 மணிக்கு தொடங்குகிறது.

-------------

மியாமி ஓபன் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ரோஹன் போபன்னா – ஆஸ்திரேலியாவின் மேத்யூ எப்டன் இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் இந்த இணை, 7-5, 7-6 என்ற செட் கணக்கில் மொனாக்கோவின் Hugo Nys – போலந்தின் Jan Zielinski இணையை வென்றது.

<<<<>>>>